
# கமநல செய்திமடல்

மலர்: 2    2018 இதழ்: 1 – 2    ISSN: 2579-1982




பக்கம் 02




பக்கம் 03



பக்கம் 06





பக்கம் 07



பக்கம் 08

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

## “உணவுப் பாதுகாப்பு நியமங்களை மேம்படுத்தல்” பற்றிய சர்வதேச கருத்தரங்கு




**CIRDAP – APO சர்வதேச கருத்தரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வு**

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI), ஆசிய மற்றும் பசுபிக் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிலையம், (CIRDAP), ஆசிய உற்பத்தித் தாபனம் (APO) ஆகியன இணைந்து ஒழுங்கமைத்த உணவுப் பாதுகாப்பு நியமங்களை மேம்படுத்தல் பற்றிய சர்வதேச கருத்தரங்கானது 2018 மார்ச் 05-08 ஆம் திகதி வரை நிறுவக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த சர்வதேச கருத்தரங்கின் பிரதான நோக்கம் யாதெனில், அறிவு, வளர்ந்துவரும் போக்குகள் மற்றும் அனுபவங்களை உற்பத்தி முகாமையாளர்கள், ஆலோசகர்கள், மற்றும் காலநிலை மாற்றங்களின் போது உணவு பாதுகாப்பு நியமங்கள் சம்பந்தமாக செயற்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உணவு பதனிடல் முகாமைத்துவ நிறைவேற்று அதிகாரிகள் போன்ற சிரேஸ்ட உத்தியோகத்தர் மத்தியில் பரிமாற்றம் செய்வதாகும். மேலும், இக்கருத்தரங்கானது உலகளாவிய சந்தையில் உணவு பாதுகாப்பு சம்பந்தமாக காணப்படும் சவால்களை எதிர்கொள்ளும் மூலோபாயங்களை வகுப்பதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தது.

ஆரம்ப வைபவமானது ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் மஹிந்த சில்வா கேட்போர் கூடத்தில் விவசாய இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த அலுவிஹார, விவசாய அமைச்சின் செயலாளர் திரு. பீ. விஜயரத்ன, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் முன்னால் பணிப்பாளர் திரு. கே.ஈ. டபிள்யூ. கரலியத்த, CIRDAP பணிப்பாளர் நாயகம் திரு. டெவிடா ஜீ. போசியாவா டேஜினுநுவாலு, ஆசிய உற்பத்தித் தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஷேக் தன்வீர் ஹீசைன், விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டீ.வீ. பந்துலசேன, தேசிய உற்பத்தி செயலகத்தின் மேலதிக பணிப்பாளர் திரு. ஜே.ஏ.டீ. ரோசான் மற்றும் விவசாய அமைச்சுடன் இணைந்துள்ள நிறுவகங்களின் தலைவர்கள் ஆகியோரின் மேன்மைதங்கிய பிரசன்னத்தின் மத்தியில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தில், 16 நாடுகளை பிரதி நிதித்துவம் செய்யும் வகையில் (இலங்கை, தாய்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களதேஸ், சீனா, கம்போடியா, இத்தாலி, ஈரான், போலந்து, வியட்நாம், மொங்கோலியா, தாய்வான், பிஜி, நேபாளம், பிலிப்பைன்ஸ்) உணவு பாதுகாப்பு பற்றிய இருபத்தாரு வல்லுநர்கள் மற்றும் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் உணவுத் துறையை சேர்ந்த 14 புகழ்பெற்ற நபர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆறு வெளிநாட்டு மற்றும் மூன்று உள்ளூர் வளவாளர்கள் அவர்களது பங்களிப்பை வழங்கினர்.



மாநாட்டின் போது

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான பிரதம ஒருங்கிணைப்பாளராக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் விவசாய கொள்கை மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டு பிரிவின் சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி. சாகரிகா ஹிடிஹாமு கடமையாற்றினார்.

## 2018ல் முதல் காலாண்டில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள்

2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் நான்கு ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஆராய்ச்சி அறிக்கைகள் அத் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைக்கு வகுப்போர் மற்றும் களத்தில் இணைந்துள்ள ஆய்வாளர்களுக்கும் பொருந்தும். இந்த ஆராய்ச்சி அறிக்கைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கைகள் | ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|
| Evaluation Small Scale Poultry in Sri Lanka (ER – 210) | Sagarika Hitihamu |
| தமிழ் மொழிப்பெயர்ப்பு ஆராய்ச்சி அறிக்கை:- பனை வள தொழில்: வடக்கு கிழக்கு மாகாணங்களில், பங்குதாரர்களின் சமூக-பொருளாதார நிலை மற்றும் பிரச்சினைகள் | R.L.N. Jayatissa, Sri Vijendran and A.M. Nilushini<br>**Translated by**<br>S.J. Francis |
| Vulnerbility of Rainfed Farmers to Drought and Podential Strategies to Enhance Resilience Capacity (ER-211) | H.J.C. Jayasooriya |
| Farmer Perception and Demand for Pesticide in Rice Cultivation of Sri Lanka | T.P. Munaweera and J.A.U.P. Jayasinghe |
| Hybrid Seeds and Vegetable Cultivation in Sri Lanka : Local vs Imported | Prasanna Wijesinghe and Rasika Wijesinghe |
| Prospects and Constraints of Off Season Big Onion Production Programme in Hambantota District | P.A. Jayamini Champika |

### வரட்சியின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகும் மானாவாரி விவசாயிகள் மற்றும் அவர்களின் எதிர்மறைத்திறனை மேம்படுத்தும் சாத்தியமான மூலோபாயங்கள்

காலநிலை மாற்றமானது பல துறைகளில் முக்கியமாக விவசாய துறையில் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், உற்பத்தியின் அளவு மற்றும் தரம் குறைதல் போன்றன இதன் காரணமாக உருவாகியுள்ள சவால்களாகும். வரட்சி நிலைமைகளில் மானாவாரி மற்றும் பருவகால நீர்த்தேக்க அமைப்பின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளின் நிலைமையை புரிந்து கொள்வதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அவ் ஆய்வின் மூலம் நிலைத்தன்மையை அதிகரிக்கும் வழிகளும் கொள்கை பரிந்துறைகளும் கண்டறியப்பட்டன.

மழைக்கால நிலைமைகளின் கீழ் விவசாய நிலங்களைக் கொண்டுள்ள குருணாகலை, புத்தளம், மொனராகலை, பதுளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஆறு மாவட்டங்களை மையமாகக் கொண்டு இவ் ஆய்விற்குத் தரவு சேகரிக்கப்பட்டது. ஆய்வின் கண்டுபிடிப்பின் அடிப்படையில், தற்போதுள்ள கட்டமைப்புகளின் திறன் மேம்படும் போது, மழைநீர் சேகரிக்க புதிய கட்டமைப்புகளை அமைக்க பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டதுடன், வரட்சி நிலைமைகளுக்கு எதிராக பின்னடைவுத் திறன் காரணமாக புதிய தொழில்நுட்ப முறைகள் அதிகரித்தல் மற்றும் வரட்சி ஏற்பட்டுள்ள விவசாய சமூகத்தை கண்டுபிடித்து பயிர்ச்செய்கைகளை மேம்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள் முன்மொழியப்பட்டது.

சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ பிரிவைச் சார்ந்த ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு.எச். ஜே. சீ. ஜயசூரிய அவர்களால் இவ் ஆய்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

# இலங்கையில் நெல் உற்பத்தியில் பீடை நாசினிகளுக்கான கேள்வியும் கமக்காரர் கருத்தும்



விவசாய-இரசாயனப் பொருட்களை முறையாக அகற்றுவதுடன் பீடைநாசினிகளை விவேகமான முறையில் பாவனைச் செய்வதன் ஊடாக இலங்கையில் கமத்தொழிலின் எதிர்கால நிலை பேண் தகைமையை உறுதி செய்வதுடன், இவற்றால் மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல் மீது ஏற்படக்கூடிய பாதகமான தாக்கத்தையும் குறைக்க முடியும். இருப்பினும், அநேகமான விவசாயிகள் பூச்சிக்கொல்லி தொடர்பான அறிவுருத்தல்களையும் பாதுகாப்பு நடைமுறைகளையும் முறையாக பின்பற்றுவதில்லை, மாறாக குறுகிய காலத்தில் உயர்ந்த விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அதிகளவு நச்சுத்தன்மையான பூச்சிக் கொல்லிகளை தன்னிச்சையாக பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த ஆய்வானது, இலங்கையில் நெற் கமக்காரர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் பூச்சிக்கொல்லியின் அளவு மற்றும் பாவனை தொடர்பான பொருளாதாரம் மற்றும் பொருளாதாரம்-சார்பற்ற நிர்ணயிப்புகளை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக நெல் பயிர்ச்செய்கை துறையில் பூச்சிக்கொல்லியின் பாவனை மற்றும் பூச்சிக்கொல்லி பற்றிய விவசாயிகளின் அறிவு ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டது.



இந்த ஆய்வுக்கான தரவுகள் அனுராதபுரம், அம்பாறை மற்றும் குருணாகலை ஆகிய மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இருந்து எழுமாறான முறையில் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்ட 240 விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டன. இந்த ஆய்வானது, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ பிரிவைச்சேர்ந்த ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி. டீ.பீ. முனவீர மற்றும் திருமதி. ஜே.ஏ.யூ.பீ. ஜயசிங்க ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

## இலங்கை உலர் வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிர் உற்பத்தி முறைமை மீதான காலநிலை மாற்றத்தின் பாதிப்பு

உலகளாவிய உணவு உற்பத்தியில் காலநிலை மாற்றமானது முக்கியமானதொரு சவாலாக உள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே, பல்வேறு காரணங்களினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஆகையால், இந்த விடயத்தில் காணப்படும் அறிவு மற்றும் தகவல் குறைப்பாட்டிற்கு பரிகாரம் காண்பதற்கு நீண்டகால மூலோபாயம் மற்றும் தேசிய திட்டமொன்று நடைமுறையாக்கப்படல் வேண்டும். இந்த கருத்திட்டமானது, இலங்கையின் உலர் வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயிர்ச் செய்கை முறைமைகளின் காலநிலை பாதிப்பு, உணர்திறன் மற்றும் ஏற்றுக்கொள்ளும் திறன் என்பவற்றை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதன் ஊடாக, மேற்படி இடைவெளிகளை நிரப்புவதற்கான முயற்சியை மேற்கொள்கின்றது.

இந்த ஆய்வில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளானவை அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் மாத்தளை மாவட்டத்தின் உலர் வலயம் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆய்வானது 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கருத்திட்டமானது, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ பிரிவைச்சேர்ந்த சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி. ஜீ.ஜீ.டீ.எல்.டபிள்யூ. சமரசிங்க அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் சக-ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திரு. டபிள்யூ. எச்.ஏ.சாந்த், எம். ஏ.சீ.எஸ். பண்டார, ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி. டீ.பீ. முனவீர, திருமதி. ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்போடகெதர, திரு. எச்.ஜே.சீ. ஜயசூரிய மற்றும் என்.எம். டயஸ் ஆகியோர் ஒத்துழைப்பை வழங்கினர்.



## இலங்கையில் விவசாயத்துறைக்கு விவசாய பட்டதாரிகளையும் டிப்ளோமாதாரிகளையும் இணைத்துக்கொள்ளல்

அரச அனுசரணையுடன் இடம்பெறும் விவசாயக் கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்தியை நோக்கிய முக்கியமானதொரு கட்டமாக விளங்குகின்றதுடன், விவசாய பட்டதாரிகள் மற்றும் விவசாய டிப்ளோமாதாரிகள் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் சாத்தியங்கள் அதிகமாக காணப்படுகின்றது. ஆயினும், விவசாயம் சார்ந்த தொழில்கள் தொடர்பில் அரச துறையில் தொழில் வாய்ப்புக்கள் மிகக் குறைந்தளவு காணப்படுகின்றமையானது இதற்கு பாரிய முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது. இந்த ஆய்வானது, விவசாய பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை விவசாயத் துறையில் இணைத்துக்கொள்ளும் நிலை, அவர்களால் நாட்டின் விவசாயத்துறைக்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்பு மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் இணைந்து, தொடர்ந்தும் அத்துறையில் இருப்பது தொடர்பில் அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் ஆகியவற்றை இனங்காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டது.

2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை அரசாங்க பல்கலைக்கழகங்களின் விவசாய பீடங்களிலிருந்து வெளியான பட்டதாரிகளும், விவசாயத் திணைக்களத்துடன் இணைந்த விவசாய பாடசாலைகளிலிருந்து வெளியான 607 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். விவசாய பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் பெரும்பாலானோர் விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருப்பதாகவும், உள்ளூர் விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது. எனவே அரசத் துறையின் வேலைவாய்ப்பின் கடினமான தன்மை இவ் ஆய்விலிருந்து வெளியாகியது.

இலங்கையின் விவசாய விரிவாக்க சேவைகளில் பெரும்பாலான விவசாய டிப்ளோமா வைத்திருப்பவர்கள் காணப்படுவதால், வேளாண்மைத் துறையில் இளம் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா வைத்திருப்போர்களின் பங்கேற்பினை தொழில் சந்தை தேவைகளுக்கு இணையாக புதிய போக்குகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிகரிக்க முடியும் இந்த ஆய்வானது ஆராய்ச்சி உத்தியோகத்தர் மிஸ். எம். எச்.கே. ரம்பொடகெதர அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் மிஸ். யூ.பீ. ஜயசிங்க சக-ஆய்வாளராக செயலாற்றினார்.

## ஆவணப்படம்



ஆராய்ச்சி கற்கையின் அடிப்படையில், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வெளியீட்டுப் பிரிவால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படமான “ஏனைய களப்பயிர்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்” என்ற தொனிப் பொருளில் மேலதிக பணிப்பாளர் திரு. ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ அவர்களால் நிறுவகத்தின் மஹிந்த சில்வா கேட்போர் கூடத்தில் திரையிடப்பட்டது. விவசாய இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த அலுவிஹார மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் முன்னால் பணிப்பாளர் திரு. கே.ஈ. டபிள்யூ. கரலியத்த ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, இந்த ஆய்வின் அடிப்படையில் அவற்றுக்கு தீர்வுகளை காண்பதற்கும், அவர்களுக்கு அவசியமான ஊக்குவிப்பை அளிப்பதே “யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்களின் விவசாயம் மற்றும் பண்ணை தொழில்முயற்சியாண்மை” என்று தலைப்பிடப்பட்ட இந்த ஆவணப்படத்தின் பிரதான நோக்கமாகும்.



## புதுவருட விழா விளையாட்டு நிகழ்ச்சிகள் – 2018

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நலன்புரி சங்கத்தால் 2018ஆம் ஆண்டின் சார்பில் ஒழுங்கமைக்கப்பட்ட புது வருட விழாவானது, 2018 ஏப்பிரல் 26ஆம் திகதி நிறுவக வளாகத்தில் பாரிய அளவில் இடம்பெற்றது. பல புதுவருட விளையாட்டுக்களை உள்ளடக்கிய வருடாந்த விழாவானது ஊழியர்களின் ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் போசிக்கும் நோக்கத்தில் அமைந்திருந்தது. இந்த விழாவில் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஊழியர்கள் மற்றும் வெளிநாட்டு பிரமுகர்கள் பங்குபற்றினர்



கயிறு இழுத்தல்



பரிசளிப்பு வைபவம்

## சர்வதேச வெசாக் விழாவை நினைவுகூறல்

வெசாக் நிகழ்வை கொண்டாடும் முகமாக, ஒரு தர்ம போதனை, தன்சல மற்றும் வெசாக் அலங்கார கூடுகளின் போட்டிகள் ஆகியன ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தால் ஒழுங்குகமைக்கப்பட்டன. நிறுவகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு மத்தியில் 2018 ஏப்பிரல் 27ஆம் திகதி இடம்பெற்ற வெசாக் கூடு போட்டியானது, விழாவில் ஆன்மீக அம்சத்தையும் இணைத்தது. மேலும், ஊழியர்கள் மற்றும் நலன்புரி சங்கத்தின் அனுசரணையில், மரவள்ளிக் கிழங்கு தன்சல் ஒன்றும் பொது மக்களின் நன்மைக்காக நிறுவகத்தின் நுழைவாயிலில் கொடுக்கப்பட்டது.




மரவள்ளி தானத்துக்கான குழு செயற்பாடு



மரவள்ளி தானத்தை ஆரம்பித்தல்







## விவசாய வியாபார எண்ணக்கரு மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்க பிரயோகம் தொடர்பான செயலமர்வு

சந்தைப்படுத்தல் விரிவாக்கம் மற்றும் விவசாய வியாபார பாவனை என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட விவசாய பொருளியற் துறையில், விவசாய வியாபாரம் மற்றும் வணிக கணக்கீட்டினை விசேட பாடமாக கற்கின்ற மாணவர்களுக்கான தொழில் பயிற்சியானது ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8,9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்செயலமர்விற்கு சிறப்பு விருந்தினராக கமத்தொழில் இராஜங்க அமைச்சர் மாண்புமிகு திரு. வசந்த அலுவிஹாரே கலந்து கொண்டார். நிறுவகத்தின் முன்னால் பணிப்பாளரான திரு. K.W.E. கரல்லியத்த வரேவேற்புரை நிகழ்த்தியதுடன், நிறுவக ஆராய்ச்சி அதிகாரிகள் மற்றும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வளவாளர்களாக செயலமர்வில் பங்கேற்றனர்..

சந்தைப்படுத்தல் விரிவாக்கம் மற்றும் விவசாய வியாபார பாவனை தொடர்பான அறிவினை வழங்குவதற்காக கொழும்பில் அமைந்துள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்படும் பிரதான சந்தைகள் மற்றும் மீள் விநியோகம் செய்யும் நிறுவனங்களிற்கு கள ஆய்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## வெளியிடப்பட்ட வெளியீடுகள்- 2018







அனைத்து விசாரணைகள்
கமநல செய்திமடல்
பணிப்பாளர்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்,
இல 114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07

**ஆலோசகர்**
கருணாதாச உடகே
(பணிப்பாளர்)

**மேற்பார்வையாளர்**
சீ.யு சேனாநாயக்க
(சிரேஷ்ட தகவல் மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர்)

**தொகுப்பாளர் மற்றும் தலைமை பதிப்பாசிரியர்**
ச. ஜோசப் பிராண்சிஸ்
(தகவல் மற்றும் வெளியீட்டு உத்தியோகத்தர்)

**உதவிப் பதிப்பாசிரியர்**
றிபான புஹாரி
(ஆராய்ச்சி உத்தியோகத்தர்)

**நிர்மாணிப்பாளர்**
(உதேனி கருனாரத்ண)